சேர்ந்து கொண்டு அதிகாரிகளைத் தாக்குகின்ற வகையில் அங்கே ஒரு கிளர்ச்சி நடைபெற்ற காரணத்தால் உடனடியாக ஒரு பெரும் மோதுதலைத் தவிர்க்கவேண்டும் என்பதற்காக அவகாசம் அளிக்கப்பட்டது. அதற்கிடையில் நானும் திருச்சிக்கு சென்று இருந்தேன். அவர்களை எல்லாம் அழைத்து வைத்து நானும் அன்றைக்கு இருந்த உணவு அமைச்சரும் அவர்களிடத்திலே பேசியும் பார்த்தோம். ஆனால் அரசினுடைய நிபந்தனைகளுக்கு கட்டுப்பட மறுத்து பேசிக்கொண்டு இருக்கும்போதே நீதிமன்றத்திற்குச் சென்று விட்டார்கள். இதுதான் அப்போது நடந்தது.

காவிரியின் கடைமடைப் பகுதியில் வடிகால் வசதி

*765—திரு. மா. மணிமாறன் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

காவிரியின் கடைமடைப் பகுதிகளில் வெள்ள நீர் சரியாக வடியாமல் பயிர் பாழாவதைத் தவிர்க்க அரசிடம் ஏதேனும் சிறப்புத் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, காவிரி நவீனப்படுத்தும் திட்டத்தில், ஆறு மற்றும் வாய்க்கால்களை மேம்படுத்துவதுடன் வடிகால்களை மேம்படுத்துவதற்கு முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. மேற்படி திட்டத்தில் எல்லா வடிகால்களும் மேம்படுத்தப்பட உள்ளன. இத்திட்டம் நிறைவேற்றப்பட்டால் காவிரிகடைமடைப் பகுதிகளில் வெள்ள நீர் சரியாக வடியாமல் பயிர் பாழாவது தவிர்க்கப்படும்.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னால் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருக்கும் போது 1971–72-ல் வெறும் 49.6 கோடி ரூபாய்க்கு ஒட்டுமொத்தமாக தயாரிக்கப்பட்ட அந்த திட்டம் இன்றைக்கு ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு எட்டி நிற்கிறது. 20 பங்கு அதிகமாகியிருக்கிறது. இன்றைக்கு உலக வங்கி கடன் பெறுவதற்கு இதற்கு முன்னால் மத்திய அரசும், மைசூர் அரசும் முட்டுக்கட்டையாக இருந்து அந்த திட்டம் தவிர்க்கப்பட்டு, இன்றைக்கு ஆயிரம் கோடி ரூபாயை தாண்டி இருக்கிறது. எனவே மத்திய அரசை அணுகி மைசூர் அரசை அணுகி உடனடியாக ஒப்புதல் பெற்று உலக வங்கி கடன் பெற்று அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1990 மார்ச் 24]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைசூர் அரசு என்று ஒன்று இல்லை. இருந்தால் அணுகுவோம். (சிரிப்பு).

9—35 மணி

திரு. மா. மணிமாறன் ; மன்னிக்கவும். கர்நாடக அரசாங்கம் இரண்டு தடவை அன்றைக்கும்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காலம் கடந்த முயற்சி. (சிரிப்பு).

திரு. மா. மணிமாறன் : எனவே, உடனடியாக இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தினால் தண்ணீர் வந்தாலும் அங்கு தேங்குகிறது; மழை பெய்கின்ற நேரத்தில் உடனடியாகத் தண்ணீர் தேங்குகிறது. வருகின்ற தண்ணீரும் தேங்குகிறது. பல இலட்சம் ஏக்கர் பாழ்பட்டு ஆண்டுக்காண்டு இதே தொல்லைகளை அனுபவித்துக் கொண்டிருக்கின்ற அந்த மக்களுக்குப் பாதுகாப்பாக உடனடியாக உலக வங்கியிலிருந்து நிதியைப் பெற்று திட்டத்தை நிறைவேற்றுவதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம், சென்ட்ரல் வாட்டர் கமிஷனிடமிருந்து பிறகு டெக்னிக்கல் கமிட்டிக்குச் சென்று, இப்போது அது பிளானிங் கமிஷனிலே இருக்கிறது. பிளானிங் கமிஷனுடைய பரிந்துரை கிடைத்த பிறகு, அது அமைச்சரவைக்குச் சென்று பிறகுதான் நமக்குக் கிடைக்கும். எனவே அதற்கு இந்த அரசு எல்லா முயற்சி களும் எடுத்துக்கொண்டிருக்கிறது.

மின் அழுத்தக் குறைவு

*1900—திருமதி ரமணி நல்லதம்பி :

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வடக்கன்குளம் இராதாபுரம் தொகுதி காவல்கிணறு பகுதிகளில் மின் அழுத்தம் குறைவாக இருப்பதால் மின்சாரம் முழுமையாக தடைபட்டுள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக நடவடிக்கை எடுத்து தடையில்லாமல் மின்சாரம் வழங்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: தலைவர் அவர்களே,

(அ) ஆம்.